Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 190/2023**

**Deposition of PW.1(LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராம சுப்புலட்சுமி | ஜாதி | : | |
| க/பெ | : | சரவணன் | தொழில் | : | ஆசிரியர் |
| கிராமம் | : | செம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 42/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது செம்பட்டியில் குடியிருந்துகொண்டு ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்துபோன சரவணன் எனது கணவர். கடந்த 01.02.2022 ஆம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் எனது கணவர் சரவணன் எங்கள் வீட்டிற்கு மளிகை சாமான்கள் வாங்குவதற்காக எங்கள் வீட்டிலிருந்து செம்பட்டி பஸ்டாப்பில் இருக்கும் கடைக்கு சென்றுகொண்டிருந்தபோது எனது கணவர் இடது புறமாக வந்து அந்த ரோட்டை கடக்கும்போது செம்பட்டி to திண்டுக்கல் சென்ற TN 57 AL 1666 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எனது கணவர் மீது மோதி வாகன விபத்து ஏற்பட்டதாக எனது கணவரின் அண்ணன் மகள் சத்தியபிரியா என்பவர் என்னிடம் நேரடியாக வந்து எனது கணவருக்கு வாகன விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு அங்கிருந்த நபர்கள் எனது கணவரை பிடித்து உட்கார வைத்திருந்தார்கள். நான் எனது கணவரிடம் சென்று அவரை அழைத்த போது அவர் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை. அப்போது தனியார் ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட எனது கணவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனது கணவர் மீது

மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் திண்டுக்கல் பேகம்பூரை சேர்ந்த அன்சாரி என்ற பையன் வாகனத்தை ஓட்டி வந்ததாக தெரிந்துகொண்டேன். இந்த விபத்து சம்மந்தமாக நான் செம்பட்டி காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுயைடது தான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் கணவரை மருத்துவனைக்கு அனுப்பி வைத்தற்கு பிறகு நீங்கள் பின்னால் அரசு மருத்துவமக்குக்கு சென்றீரகளா என்றால் சென்றேன். உங்கள் கணவர் இறந்தபிறகு மருத்துவமனையில் வைத்து காவலரிடம் நீங்கள் புகார் கொடுத்தீர்கள் என்றால் சரியல்ல, செம்பட்டி காவல்நிலைத்தில் வைத்து புகார் கொடுத்தேன். உங்களுடைய புகாரில் சொல்லியுள்ள பெயர் விபரங்கள் காவலர் சொல்லி தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் இந்த வழக்கின் எதிரி வாகனத்தை ஓட்டி வந்து அதன் விளைவாக உங்கள் கணவருக்கு விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 190/2023**

**Deposition of PW.2 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்தி பிரியா | ஜாதி | : | |
| க/பெ | : | மணிமாறன் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | நிலக்கோட்டை | சமயம் | : | |
| தாலுகா | : | நிலக்கோட்டை | வயது | : | 31/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் நிலக்கோட்டையில் குடியிருந்துகொண்டு வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். அ.சா.1 ராம சுப்புலட்சுமி எனது சித்தி ஆவார். வாகன விபத்தில் இறந்துபோன சரவணன் எனது சித்தப்பா ஆவார். கடந்த 01.02.2022 ஆம் தேதி இரவு சுமார் 09.00 மணியளவில் வாகன விபத்தில் இறந்துபோன எனது சித்தப்பா சரவணன் செம்பட்டி பஸ்டாப்பில் உள்ள கடையில் வீட்டிற்கு மாவு பாக்கெட் வாங்கிக்கொண்டு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி இடது ஓரமாக அவர் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வந்த TN 57 AL 1666 என்ற Honda இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் எனது சித்தப்பா மீது மோதி வாகன விபத்தை ஏற்படுத்தினார். அப்போது நான் சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். ஆஜர் எதிரி தான் அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர். எனது சித்தப்பாவிற்று விபத்து ஏற்பட்டதில் தலையில் காயம் இருந்தது. அதை நான் பார்த்துவிட்டு உடனே எனது சித்தியிடம் சென்று எனது சித்தப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதடாக சொன்னேன். அவரையும் அழைத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டோம். எனது சித்தப்பாவை ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு நானும், எனது சித்தி மற்றும் எனது கணவர் மணிமாறன் ஆகியோர் செம்பட்டி காவல்நிலையம் வந்து நடந்த

சம்பவம் சம்மந்தமாக எனது சித்தி புகார் மனு கொடுத்தார். நாங்கள் அவருடன் சென்றேன். அப்போது வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடத்தில் எதற்காக நீங்கள் சென்றிருந்தீர்கள் என்ற விபரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியிருந்தீர்களா என்றால் என் அப்பா, அம்மா வீட்டிற்கு வந்துள்ளதாக சொல்லியுள்ளேன். விபத்து நடந்த பகுதி நெடுஞ்சாலை என்றும், அதிக குடியிருப்பு இல்லாத பகுதி என்றால் சரியல்ல, வீடுகள் நிறைய இருந்தது. இந்த வழக்கில் இறந்தவர் உங்கள் உறவினர் என்பதால் பார்க்காத விபத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லி சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor